(ஆ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆறும் திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆறும் திருத்த சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் இந்த சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப் படுத்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோரு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் இந்த சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஈ) 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.